# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/40 - 2019 ඔක්තෝබර් මස 27 වැනි ඉරිදා - 2019.10.27

*2146/40 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் ஆணைக்குழுவினால் 2142/47 ஆம் இலக்க 2019.09.25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேர்தல்களில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்/வேட்பாளர்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஒழுக்கநெறிகள்**

01. வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் புகைப்படமெடுப்பதிலிருந்தும், வீடியோ படம் எடுப்பதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். ஏதேனுமொரு விதத்தில் அவ்வாறு புகைப்படங்கள் அல்லது வீடியோ படம் (காணொளி) எடுத்தல் அல்லது வேறொருவர் பெற்றுக்கொண்ட புகைப்படங்கள் அல்லது காணொளிக் காட்சிகளை அச்சு, இலத்திரனியல் அல்லது சமூக ஊடகங்களூடாக பகிரங்கப்படுத்தல் அல்லது பகிருதல் அல்லது உடந்தையாக இருத்தல் கூடாது.

02. அரசியல் உரிமையற்ற அரச அலுவலர்களின் மற்றும் முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் போன்றே இளைப்பாறிய பாதுகாப்புப் படை அலுவலர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது சீருடை அணிந்து கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள் அல்லது கூற்றுக்கள், கட்சி/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் அல்லது பாதிப்புக்குட்படும் விதத்தில் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறு ஊடகங்கள் அல்லது பிரசார ஊடகமொன்றினூடாக வெளியிடுதல், ஒலி/ஒளிபரப்புதல் அல்லது பகிரங்கப்படுத்துவதற்காக பயன்படுத்துதல் கூடாது.

03. அரசியல்வாதிகளுக்காக குறித்தொதுக்கி வழங்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கான தேர்தல் அலுவலகங்களாகப் பயன்படுத்தக் கூடாது. அதே போன்று அவ்வாறான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் தேர்தல் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானி ஊடாக அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு முரணான எந்தவொரு தவறை அல்லது ஊழல் செயற்பாட்டை அல்லது சட்டவிரோதமான செயற்பாட்டை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என்.ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 27.

11-1033